எஸ்.டி.சி எண். 318/2021 தேதி:11.03.2025

<u>ம.சா.ஆ.1 ஆன திரு. சுரேஸ் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு தொடர்ச்சி விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் மனைவியுடைய ஒப்புதலின் பேரில் ரூ.10,00,000/- கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரியின் மனைவிக்கு எதிரி என்னிடம் பெரும் கடன் குறித்து தெரியபடுத்த வேண்டும் என்று எதிரியின் மனைவியிடம் தெரிவித்தேன். தகவல் கொடுப்பதற்கும் ஒப்புதல் பெறுவதற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் நான் எதிரியின் மனைவியிடம் எதிரி என்னிடம் கடன் கேட்பதாக தெரிவித்து விட்டு எதிரியுடைய மனைவியின் ஒப்புதலையும் பெற்று தான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். நான் எதிரியின் மனைவியுடைய ஒப்புதலை பெற்று எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறும் நிலையில் ஏன் இவ்வழக்கில் கண்ட கடன் பத்திரத்தில் (Ex.P6) எதிரியின் மனைவி கையொப்பம் செய்யவில்லை என்றால் மேற்குறிப்பிட்ட கேள்விக்குண்டான பதிலை நான் ஏற்கெனவே எனது குறுக்கு விசாரணையில் கூறிவிட்டேன். இவ்வழக்கில் கண்ட கடன் பத்திரம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 09.06.2021 அன்று எதிரி எனக்கு எழுதி கொடுத்ததாக நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள உறுதி மொழி பத்திரத்தில் (Ex.P6) எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது புகாரில் பத்தி 6 ல் கண்ட அட்டவணையில் முதல் நான்கு குறிப்புகளுக்கான கூட்டுத்தொகை எவ்வளவு காணப்படுகிறது என்றால் ரூ.7,25,000/- ஆகும். 5 வது குறிப்பாக ரூ.2,75,000/-

கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ம.சா.ஆ. 6 ஆனது 02.01.2019 அன்று ஏற்படுத்தப்பட்டதாக காணப்படுகிறது என்றால் எதிரி தான் அதனை தயார் செய்து கொண்டு வந்தார். 02.01.2019 அன்று தான் எதிரி என்னிடம் ம.சா.ஆ.6 னை கொடுத்தார். எதிரி முகப்பேரில் உள்ள என்னுடைய வீட்டில் 02.01.2019 அன்று வைத்து ம.சா.ஆ.6- னை கையொப்பம் செய்து கொடுத்தார். எதிரி எனது வீட்டில் வைத்து தான் ம.சா.ஆ.6- னை ஏற்படுத்தி கொடுத்தார் என்ற விவரத்தை ம.சா.ஆ.6 குறிப்பிடவில்லை என்றால் எதிரி தான் ம.சா.ஆ.6- னை தயார் செய்து கொண்டு வந்தார். ம.சா.ஆ.6 னை நான் தான் தயார் செய்தேன் என்றாலும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.6 பொய்யாக நான் தயார் செய்த பொய் ஆவணம் என்றால் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் கண்ட ரூ.10,00,000/-ல் பிறகு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூ.2,75,000/- குறித்து எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மேற்சொன்ன ரூ.2,75,000/- உடன் சேர்த்த தொகை தான் ரூ.10,00,000/- ஆகும். மேற்கண்ட சங்கதியை நான் எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். கொடுக்காத பணத்தை கொடுத்ததாக சொல்லி ம.சா.ஆ.6 ஏற்படுத்தப்பட்ட நிலையில் அதில் யாரும் கையொப்பம் செய்திருக்க மாட்டார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இறுதியாக கொடுத்த ரூ.2,75,000/- ன் போது தான் எதிரி ம.சா.ஆ-6 னை என் வசம் எழுதி கொடுத்தார். அதற்கு முன்பு வரை நம்பிக்கையின் பேரில் தான் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். நான் மேற்கூறியவாறு சொன்ன சங்கதி உண்மை என்றால் 07.01.2019 ற்கு பிறகு தான் கடன் பத்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

மேற்குறிப்பிட்ட காரணத்தினால் தான் எதிரியினுடைய மனைவியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், சத்தியபிரமாண வாக்குமூலத்தில் இறுதியாக கொடுத்த ரூ.2,75,000/- த்தையும் சேர்த்த தொகை தான் ரூ-10,00,000/- என்ற விவரத்தையும் மேற்குறிப்பிட்ட ரூ.2,75,000/- த்திற்கும் சேர்த்து தான் கடன் பத்திரம் (Ex.P6) ஏற்படுத்தப்பட்டது என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ம.சா.ஆ.6 ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட சங்கதியை நான் எனது உறுதி மொழி பத்திரத்தில் கூறியுள்ளேனா என்றால் எதிரி தான் அதனை தயார் செய்து கொண்டு வந்தார். நான் எனது புகாரிலும் பிராமாண வாக்குமூலத்திலும் எதிரி தான் கடன் பத்திரம் மற்றும் உறுதி மொழி பத்திரத்தை தயார் செய்து வந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதியை நான் எனது புகார் பத்தி 10 ல் கூறியுள்ளேன். ம.த.சா.ஆ.7 ல் 02.01.2019 அன்று ரூ.10,00,000/- வாங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ம.சா.ஆ.7 னை நான் தான் பொய்யாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார். எதிரி எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கண்ட சங்கதிகளை மறுத்து தான் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியாக ஞாபகமில்லை. ரிஜாய்ன்டர் நோட்டீஸ் எதுவும் எதிரிக்கு நான் அனுப்பவில்லை உடனடியாக இவ்வழக்கினை நான் தாக்கல் செய்துவிட்டேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(S/d. Tmt.A.Theviya)

Judicial Magistrate,

Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)

Judicial Magistrate,

Fast Track Court,

Ambattur.